இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 92 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 26 – வியாழக்கிழமை 12 நவம்பர் 2026 – சென்னை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 92 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 26 - Thursday 12 November 2026 - Chennai 8 Pages ₹ 5.00

## சோப்பளாங்கி ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு முழுமையாக சீரழிவு! 24 கொலைகளைத் தொடர்ந்து

# தலைநகர் சென்னையிலேயே ஒரே நாளில் 3 கொலைகள்!

## சட்டம் – ஒழுங்கு நிலைமை குறித்து ஆளுநரிடம் அறிக்கை கேட்கும் ஒன்றிய அரசு!

**சென்னை, நவ. 12 -**

**“நிர்வாகத் திறனற்ற சோப்பளாங்கி த.வெ.க. ஆட்சியில் தீபாவளியன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற 24 படுகொலைகளைத் தொடர்ந்து, சென்னையில் ஒரே நாளில் 3 கொலைகள் அரங்கேறியுள்ளன.**

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சிக்கு வந்தபின் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் பெருகிவிட்டன. நவம்பர் 8ம் தேதி தீபாவளி தினத்தன்று மட்டும் தமிழ்நாடு முழுவதும் 19 படுகொலைகள் அரங்கேறின. நவம்பர் 9ம் தேதி தீபாவளிக்கு மறுநாள் 5 படுகொலைகள் என 2 நாட்களில் மட்டும் 24 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கியுள்ளது.

தேனியில் சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த போதை கும்பலை, தட்டிக்கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார் அடித்துக்கொலை செய்யப் பட்டார்.

தீபாவளி தினத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில்



5 காவல்துறை எஸ்.ஐ.க்களை ரவுடி கும்பல் அரிவாளால் வெட்டி கொலை செய்ய முயன்றன. த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 6 மாதங்களில் காவல் சிறப்பு எஸ்.ஐ., ஊர்க்காவல் படை காவலர் உட்பட 5 காவலர்கள் கொலை செய்யப்பட்டனர்.

த.வெ.க. ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய போலீஸாருக்கே பாதுகாப்பு இல்லாமல், அவர்கள் மீது தாக்கு தல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித் துள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு நிலை குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்யுமாறு ஆளுநர் அர்லேகருக்கு, ஒன்றிய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

### பெரம்பூரில் ஒருவர் கொலை!

சட்டம் - ஒழுங்கு குறித்து முதல்வர் விஜய், உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஆய்வுக்கூட்டம் நடத்திய நிலையில், சென்னையில் மட்டும் ஒரே நாளில் 3 படுகொலை சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர் குலைந்து கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது.

சென்னை பெரம்பூர் அருகே செம்பியத்தில், ரமேஷ் என்பவர் கத்தியால் சரமாரியாகக் குத்திக் கொலை.

### அமைச்சர்கள் குடியிருக்கும் பகுதியிலேயே கொலை!

சென்னையில் அமைச்சர்கள் குடியிருக்கும் அபிராமபுரம் பகுதி யில் ஒருவர் படுகொலை செய்யப் பட்டுள்ளார். சென்னை பசுமை வழிச் சாலையில் அமைச்சர்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகள் உள்ளன. அங்குள்ள குட்டி கிரா மணி தெரு பேருந்து நிலையம் அருகே பிற்பகல் நேரத்தில் சிவக் குமார் என்பவர் ஆட்டோவில் அமர்ந்து மது அருந்திக் கொண்டி ருந்தார்.

அப்போது அங்கு வந்த லோக நாதன் என்பவர், சிவக்குமாரை கத்தியால் வெட்டிவிட்டு தப்பியோடி விட்டார். இதில், பலத்த காயம் அடைந்த சிவக்குமாரை அப்பகுதி யில் இருந்த பொதுமக்கள் மீட்டு, சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், சிவக்குமார் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கொலை செய்துவிட்டு தப்பி யோடிய ரவுடி லோகநாதன் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### காசிமேட்டில் ஒருவர் கொலை!

சென்ன காசிமேடு கடற்கரை அத்திப்பட்டு பள்ளப்பகுதி அருகே இளைஞர் ஒருவர் மூளை சிதறி இறந்து கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நடை பெற்ற விசாரணையில், கொலை செய்யப்பட்டவர் காசிமேடு பகுதி யைச் சேர்ந்த தீபக் என்ற ரவுடி என் பது தெரியவந்தது. முன்விரோதம் இருந்த நிலையில், எதிர் தரப்பைச் சேர்ந்த 6 பேர் கொண்ட கும்பல், தீபக்கை சமாதானம் பேசுவது போல அழைத்து வந்து தலை, முகம் சிதையும் அளவிற்கு கொலை செய்துள்ளனர்.

## போனஸ் வழங்கவில்லை! கூட்டுறவுத் துறை ஊழியர்கள் குற்றச்சாட்டு!

தாம்பரம், நவ.12–

தமிழகத்தில் கூட்டுறவு சங்கங் களில் பணிபுரியும் ஊழியர்க ளுக்கு 2025–26ம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்குவது தொடர்பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை அர சாணை எண் 289ஐ கடந்த நவம் பர் 2ம் தேதி வெளியிட்டது.

ஆனால், தணிக்கைப் பணிகள் முடிவடைய வில்லை எனக் காரணம் கூறி, 20 சதவீத போனஸ் வழங்கு வதற்கான வாய்ப்பு இருந்தும் 10 சதவீதம் மட்டுமே வழங் கப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் ரூ.8,400 மட்டுமே கிடைத்துள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுமட்டுமின்றி, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு மாத ஊதியமும் உரிய தேதியில் வழங்கப் படுவதில்லை என்றும், அடிக்கடி தாமதம் ஏற்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களை ஆய்வு செய்யும் பொறுப்பு அலுவலர்கள், பணியாளர்களுக்கு மாத ஊதியம் முறையாகவும் உரிய நேரத்திலும் வழங் கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதில்லை என்றும் குற்றம்சாட்டுகின்றனர்.

## பத்திரப் பதிவில் புதிய நடைமுறை; பத்திர எழுத்தர்கள் எதிர்ப்பு!

சென்னை, நவ. 12 –

பத்திரப்பதிவுத்துறையில் ‘ஸ்டார் 3.0’ என்ற மேம்படுத்தப்பட்ட திட்டத் தின்கீழ் இஹப் என்ற புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக இந்த திட்டத்தை சென்னை, கோவை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் அமல் படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பத்திர எழுத்தர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

அமலுக்கு வரும்போது, பத்திரம் எழுதும் ஒப்பந்த பணியை சாதாரண பத்திர எழுத்தர்கள் பெருந்தொகை கொடுத்து ஏலம் எடுக்க முடியாது. கார்ப்பரேட் நிறுவனங்கள் தான் அதை செய்ய முடியும் என்று இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

## ஒன்றிய – மாநில உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட

# குரியன் ஜோசப் குழுவை கலைத்தது தவறு!


## ‘தி இந்து’ தலையங்கத்தில் விமர்சனம்!

**சென்னை, நவ. 12 -**

**இந்தியாவின் கூட்டாட்சி அமைப் புக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டிய குரியன் குழுவை த.வெ.க. அரசு தேவையற்ற காரணங்களை கூறி கலைத்துள்ளதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு குற்றம்சாட்டியுள்ளது.**

‘தி இந்து’ ஆங்கில நாளேடு வெளி யிட்டுள்ள தலையங்கத்தில், இந்தியக் கூட்டாட்சி அமைப்பு, மாநில சுயாட்சி மற்றும் ஒன்றிய மாநில உறவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து பரிந் துரைகளை வழங்க முந்தைய தி.மு.க. அரசால் குரியன் ஜோசப் குழு அமைக்கப்பட்டதாக தெரிவித் துள்ளது.

இந்நிலையில் தற்போதைய த.வெ.க. அரசு எந்தவொரு வலுவான காரணமோ அல்லது அவசியமோ இன்றி, இக்குழுவை திடீரெனக் கலைத்துவிட்டு, அதன் பணிகளைத் தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத் திடம் ஒப்படைத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குரியன் குழு தனது பணிகளை மிகுந்த புலமைத் தன்மையுடனும், தீவிரத்துடனும் மேற்கொண்டது. பிப்ரவரி மாதம் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இக்குழு



THE HINDU

**Without rationale**

India's federal structure could have benefited from the Kurian Committee

By abruptly disbanding the Justice Kurian Joseph Committee on Union-State Relations and handing over its task to the Tamil Nadu State Law Commission, the C. Joseph Vijay government appears to have succumbed to the political impulse to reverse earlier decisions rather than being guided by any compelling rationale or necessity. This gains credence from the very grounds cited. The committee executed its mandate with scholarly rigour, seen in Part I of its report that was submitted to the then M.K. Stalin government in February. Citing the Committee's basic character of being a "non-statutory body" is unconvincing, particularly when the Law Commission itself is established only through "executive order". There is also no public evidence of State Law Commissions having examined or addressed issues concerning Union-State relations. The mandate "to suggest ways and means for the inter-State relations and Centre-State relations", constitutes only one part of the broader terms of reference of the State Law Commission, reconsti-

வின் அறிக்கையின் முதல் பகுதி இதற்குச் சான்றாகும். இக்குழு ஒரு “சட்டப்பூர்வமற்ற அமைப்பு”என்று த.வெ.க. அரசு கூறுவது ஏற்புடைய தல்ல. மாநில சட்ட ஆணையத்திற் குப் பல பொறுப்புகள் இருப்பதால், முந்தைய மாநில அரசுகள், பொதுப் பட்டியலில் உள்ள விவகாரங்கள் தொடர்பான முரண்பாடுகளை ஆய்வு செய்யவும், தீர்வுகளைப் பரிந்துரைக் கவும் உயர்மட்டக் குழுக்களை அமைத்து வந்தன.

குரியன் குழுவிற்கும் மாநில சட்ட ஆணையத்திற்கும் வழங்கப்பட்ட பணிகளின் தன்மை மற்றும் வரம்பு கள் தொடர்பாக த.வெ.க. அரசின் வாதம் நிலைத்து நிற்கவில்லை. செப் டம்பர் மாதம், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், இக்குழுவின் செயல்பாட்டை “முடக்குவதற்கான” முயற்சி நடப்பதாகச் சுட்டிக்காட்டி யிருந்தார்.

குரியன் குழுவின் முதல் அறிக் கையை நடுநிலையுடன் ஆய்வு செய்தால், மாநில சுயாட்சி, தொகுதி மறு வரையறை மற்றும் ஆளுநர் பதவி உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் குறித்து, அது எவ்வளவு ஆழமாக வும், விரிவாகவும் ஆய்வு செய்துள் ளது என்பது புலப்படும். பா.ஜ.க.வைத் தவிர மற்ற அனைத்து அரசியல் கட் சிகளும் இந்த அறிக்கையை பெரும எவில் வரவேற்றிருந்தன. எனவே, அரசு தனது முடிவை மறுபரிசீலனை செய்து, இந்தக் குழு தனது பணியை நிறைவு செய்ய அனுமதிப்பது சிறப் பாக இருக்கும். இது, ஒன்றிய மாநில உறவுகளில் இணக்கமான சூழலை உருவாக்கி, மிகவும் சமநிலையான கூட்டாட்சி நிர்வாகக் கட்டமைப்பை நோக்கிய அரசியல் முயற்சிகளை வலுப்படுத்தும் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

## பெண் கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி:

# தலைமைச் செயலாளரிடம் த.வெ.க. எம்.எல்.ஏ. மீது புகார்!

## உயர் அதிகாரிகளிடையே பரபரப்பு!

சென்னை, நவ.12 –

சென்னை தலைமைச் செயலகத் தில் நேற்று முன்தினம் பரபரப்பான தகவல் பரவியது.

த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தலைமைச் செயலாளர் சாய்குமாருக்கு, கலெக்டர் பத்மஜாவின் கணவரும், விழுப்புரம் மாவட்ட கலெக்டருமான ஷேக் அப்துல் ரஹ்மான் ஒரு புகார் கடிதம் எழுதி யுள்ளதாக கூறப்படுகிறது.

அந்த கடிதத்தில், தனது மனைவி யான கள்ளக்குறிச்சி கலெக்டர் பத்மஜா வுக்கு, எம்.எல்.ஏ. தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்துள்ளார் என்றும், அத்துமீறி வீட்டுக்கு வந்ததாகவும், ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியுள் ளார் என்றும் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

இந்த புகார் கடிதம், முதல் அமைச் சரின் பார்வைக்கு அனுப்பப்பட்டு இருப்பதாகவும் அதிகாரிகள் வட்டா ரத்தில் கூறப்படுகிறது.

இந்த புகார் குறித்து தலைமைச் செயலாளர் நேற்று முன்தினம் கலெக்டர் பத்மஜாவிடம் விசாரணை நடத்தியதாக கூறப்படுகிறது.

அப்போது தலைமைச் செயலா ளர், என்ன நடந்தது என்பதை முழு மையாக கேட்டறிந்தார் என ‘தினத்தந்தி’ நாளேடு செய்தி வெளி யிட்டுள்ளது.

## பெண் கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி:

# த.வெ.க. எம்.எல்.ஏ.வை உடனே கைது செய்க!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 12 –

இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு அறைகூவல் என்ற ஆவண வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பேசியதாவது: –

மாநில அரசின் நலனுக்காக உருவாக் கப்பட்ட குரியன் ஜோசப் குழுவை த.வெ.க. அரசு கலைத்தது மிகப்பெரிய தவறாகும். கள்ளக்குறிச்சி கலெக்டருக்கு த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவர் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட கலெக்டர் இந்தப் புகாரை இதுவரை மறுக்கவில்லை. இத்தகைய சூழலில், த.வெ.க. எம்.எல்.ஏ. மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து, குற்றவியல் நடவடிக்கை எடுத்து, அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் பக்கம் தான் அரசு நிற்க வேண்டும். இதுபோன்ற பிரச்சினைகளில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இதுவரை த.வெ.க. அரசு இந்த விவகாரத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காப்பது, உங்களுக்கு வாக்களித்த பொதுமக்களைக் கடும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.